கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி. ஆர். பாலு எம்.பி அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி. ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் அமைச்சர் எ.வ. வேலு, தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா ஆகியோர் நேரில் வந்து அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி உட்பட்ட பூந்தமல்லி ஒன்றியம் நடுகுத்தகை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முகமை தொடங்கி வைத்து சான்றிதழ்களை வழங்கினார். உடன் வட்டாட்சியர் காயத்ரி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜ், ஒன்றிய திமுக செயலாளர் டி.தேசிங்கு, சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், ஜி.விமல்வர்ஷன், கே.சுரேஷ் குமார், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, எம்.மோகன், யமுனா ரமேஷ், என்.லட்சுமி, சாக்ரடிஷ், ஜி.சுகுமார், கூடப்பாக்கம் பா.கந்தன், கட்டதொட்டி குணசேகரன், உள்பட அதிகாரிகள் நிர்வாகிகள் உள்பட பலர் உள்ளனர்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108 -ல் '

'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.23- கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, மேயர் இராமநாதன் சாலையில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் நேற்று (22.08.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமைத் தொடங்கி வைத்து, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் அவர்களின் கோரிக்கைகள் குறித்துக் கலந்துரையாடினார்.

முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, பொதுமக்களின் குறைகளை அவர்களின் வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் ஜூலை 15, 2025 முதல் நவம்பர் 2025 வரையிலும் அனைத்து மாவட்டங்களிலும் 10,000 முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் குறித்து 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்.

இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த 43 சேவைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்கிட மருத்துவ முகாம்களின் நடத்தப்படுகின்றன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்து அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண்.108 க்குட்பட்ட பொதுமக்களுக்கான "உங்களுடன் ஸ்டாலின்" முகாம், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில், 22.08.2025 அன்று சேத்துப்பட்டு, மேயர் இராமநாதன் சாலையில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெற்றது. இம்முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, காவல் துறை உள்ளிட்ட 13 அரசுத் துறைகள் மூலம் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான ஒப்பமும் வழங்கப்பட்டது. பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் இம்முகாமைத் தொடங்கி வைத்ததோடு, முகாமில் இடம் பெற்ற ஒவ்வொரு அரசுத் துறை பகுதியையும் நேரில் சென்று பார்வையிட்டு, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் கலந்துரையாடி, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் தெரிவித்தார். மேலும், இம்முகாமையொட்டி நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டு, மருந்துகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டார்.

இம்முதற்கட்ட முகாமில் கலந்துகொள்ளுவதற்கு ஏற்ப வார்டு எண்.108 க்குட்பட்ட 70 தெருக்களில் வசித்துவரும் 3,392 குடும்பங்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டன. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து 1,479 மனுக்கள் பெறப்பட்டன.

இம்முகாமில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8இன் மண்டல அலுவலர் சுந்தர்ராஜன், உதவி செயற் பொறியாளர் சுரேஷ் பாபு, உதவிப் பொறியாளர் மஸ்தானி மற்றும் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

மேலும், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108 'அ' வட்டப் பகுதி பிரதிநிதி என்.இளஞ்செழியன், 77 வது வட்ட அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, பாக முகவர் கவிதா, சுந்தர்ராஜன், ஜெ.சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரை! தலைமை: ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.!

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 141 (அ) வட்ட செயற்குழுக் கூட்டம்!

வட்டக் கழகச் செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன் அறிக்கை!

சென்னை, ஆக.23- சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்கு பகுதியில் இன்று (23.8.2025 - சனிக்கிழமை) 141 (அ) வட்ட கிளை கழக செயற்குழுக் கூட்டம் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதல் படி, சி.ஐ.டி நகர் 4வது பிரதான சாலையில் உள்ள இராஜாஜி சேவா சங்க கட்டிடத்தில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ களத்தில் கழகத்தினர் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்வில் மேற்கு பகுதி கழக செயலாளர் கே. ஏழுமலை, தொகுதி பார்வையாளர் திருமதி ரத்னா லோகேஸ்வரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி , வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எஸ்.லட்சுமி காந்தன், மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே வட்ட கிளை கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், பாக கமிட்டி உறுப்பினர்கள், பாக டிஜிட்டல் ஏஜென்ட்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட மற்றும் பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள், துனண அமைப்பாளர்கள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் எஸ். லட்சுமி காந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மயிலை த.வேலு ஆலோசனை! எஸ்.முரளி - கோவி. லெனின் பங்கேற்பு !

125 அ வட்ட செயற்குழு கூட்டம்!

வட்ட கழகச் செயலாளர் வே.வெற்றிவேல் அறிக்கை!

சென்னை, ஆக. 23- சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125அ வட்ட கழக செயற்குழு மற்றும் நிர்வாகிகள் கூட்டம் இன்று (23.8.2025- சனிக்கிழமை) மாலை 6:30 மணியளவில் சக்தி கல்யாண மண்டபம் சாலை தெரு வட்டக் கழக செயலாளர் வே. வெற்றிவேல் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு ஆலோசனை வழங்குகிறார்.

இதில் மயிலை கிழக்குப் பகுதி செயலாளர் எஸ். முரளி மயிலாப்பூர் தொகுதி பார்வையாளர் தகவல் தொழில்நுட்ப அணி மாநில ஆலோசகர் கோவி.லெனின் மற்றும் மாமன்ற உறுப்பினர் ஏ.ரேவதி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எனவே 125 அ வட்டக் கழகத்திற்கு உட்பட்ட BLA2, BDA மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்

பொருள் : ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்ததற்கு நன்றி தெரிவித்தல் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு 125 அ வது வட்டக் கழக செயலாளர் வே. வெற்றிவேல் அறிக்கை விடுத்துள்ளார்

மாதவரம் வடக்குப் பகுதி 19-வது வார்டில்

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட சிறப்பு முகாம்!

பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் பணிகளை துரிதப்படுத்தினார்!

மாதவரம்,ஆக.23- மாதவரம் வடக்கு பகுதி 19ஆவது வார்டு ராயல் பேலஸ் திருமண மண்டபத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது.

முகாமில் மாத்தூர் எம் எம் டி ஏ 57வது தெரு மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் 300 வீடுகளுக்கு பைப் லைனில் குடிநீர் குறைந்த அழுத்தத்தில் வருகிறது என்று பொதுமக்கள் மற்றும் 19 ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் ஆகியோர் கொடுத்த மனுவின் மீது, சென்னை குடிநீர் வடிகால் வாரிய மணலி மண்டலம் 2 செயற்பொறியாளர் பிரதீபா மற்றும் அதிகாரிகள் ரேணுகாதேவி, தங்கப் பாண்டியன் மதன்ராஜ் ஆகியோர் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, 57 வது தெரு சந்திப்புகளில் இரண்டு இடங்களில் ஜேசிபி இயந்திர துணையுடன் ஒரே நாளில் இரவு பகலாக குடிநீர் குழாய்களை சீரமைத்து தங்கு தடையின்றி குடிநீரை வழங்கினார். சென்னை குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உடன் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்கள் பணிகளை துரிதப்படுத்தினார்.

உடன் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம் பாக்கம் ஆர். பாபு,மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், ஐசிஎப் கே. விஜயகுமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி. ராஜேஷ் கண்ணன், சிவபிரகாஷ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர். உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மனு கொடுத்த ஒரே நாளில் தங்கள் பகுதிக்கு சீரான குடிநீரை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி 19ஆவது வார்டு ராயல் பேலஸ் திருமண மண்டபத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் மாத்தூர் எம்.எம்.டி.ஏ. 57வது தெரு மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் 300 வீடுகளுக்கு பைப் லைனில் குடிநீர் குறைந்த அழுத்தத்தில் வருகிறது என்று பொதுமக்கள் மற்றும் 19 ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் ஆகியோர் கொடுத்த மனுவின் மீது, சென்னை குடிநீர் வடிகால் வாரிய மணலி மண்டலம் 2 செயற்பொறியாளர் பிரதீபா மற்றும் அதிகாரிகளுடன் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் பணிகளை துரிதப்படுத்தி ஒரே நாளில் குடிநீர் வழங்க வழிவகை செய்தார். உடன் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, எஸ். உதயகுமார், ஐசிஎப் கே. விஜயகுமார், ஜி. ராஜேஷ் கண்ணன், சிவபிரகாஷ் உள்ளிட்டோர் இருந்தனர்.

மயிலை த.வேலு - ஜெ.கருணாநிதி பங்கேற்பு!

141வது வட்டக் கழக செயற்குழு கூட்டம்!

லலிதாபுரம் என்.துரை அறிக்கை!

சென்னை, ஆக.23- 141 வட்ட செயலாளர் லலிதாபுரம் என்.துரை அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராய நகர் கிழக்கு பகுதி 141வது வட்ட செயற்குழு கூட்டம் ஜெ. கருணாநிதி சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் தலைமையிலும், கே. ஏழுமலை MC, மேற்கு பகுதி செயலாளர் , வட்ட செயலாளர் என்.துரை அவர்கள் முன்னிலையில் இன்று (23.08.2025 - சனிக்கிழமை) மாலை 7.00 மணியளவில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலத்தில் நடைபெறுகிறது.

மேற்படி கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட கழக செயலாளர் மயிலை த .வேலு எம். எல்.ஏ., ரத்தனா லோகேஸ்வரன் தேர்தல் பார்வையாளர், ராஜா அன்பழகன் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் மற்றும் எம்.சி, மோனிஷா கருணாநிதி தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர், ஜெ. ஜானகிராமன் பொதுக்குழு உருப்பினர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கியின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு வட்ட கழக நிர்வாகிகள் ,பகுதி கழக நிர்வாகிகள்,மாவட்ட நிர்வாகிகள் ,பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள் ,BLA 2,BDA ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்ள ப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.